பிற்பகல் 12-15.

4. அறிவிப்புக்கள்—தொடர்ச்சி.

(ஏ) தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப் படுத்துதல்) திருத்தச் சட்டமுன் வடிவு, 1994 (ஆ.இ.).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு: 1994-ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நில உச்ச வரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 13/1994) பேரவையில் ஆய்வு செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

6. அரசினர் சட்ட முன் வடிவுகள் (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி.

(உ) தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப் படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு. 1994.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: 1994-ஆம்ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்சவரம்பு மற்றும் முறைப்படுத்து தல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 13/1994). மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

''1994-ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற நில (உச்ச வரம்பு மற்றும் முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன் வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 13/1994) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்.''
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. வே. தம்புசாமி:

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்ட மன்றத்தில் நகர்ப்புற நில உச்சவரம்ப திருத்தச் சட்ட முன்வடிவை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் முன்மொழிந்திருக்கிறார்கள்.

@ 24-4-1994-ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.